(இ) ஆம், எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) இதைப்பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கூட்டுறவுப் பிரிவிற்கு அரசு ஆணை பிறப்பித்தது. சங்கத்தைப் பற்றிய குற்றச்சாட்டுகள் மிகப் பெரியன என்றும், அவ்வமயமிருந்த சங்கக்குழு சரியாக நிர்வாகத்தைக் கவனிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். அதனல் சங்கத்தின் குழு கலைக்கப்பட்டு சங்க அலுவல்களைக் கவனிக்க ஒரு தனி அதிகாரி 1970-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இரண்டாம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். சங்கத்தின் ஊழல்களை அகற்றி அதைச் சரிவர இயங்கவைக்கும்படி அந்த அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, இதிலே காணப் பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு எவ்வளவு காலமாகும். அதிலே பங்கு போட்டவர்கள். வீடு கட்டித் தரவில்லை என்று சொல்கிருர்கள். அதைத் தவிர்க்க அரசாங்கமே ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, அந்த சிவானந்தம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் இருக்கிற குறைபாடுகளைப் பற்றியும், அதிலே சில கையாடல்கள் நடந்து இருப்பதாகவும் குறைபாடுகள் வந்து இருக்கின்றன. அதைப் போலவே 3-வது கட்டத்திலே நிலம் வாங்குவதிலே சில சங்கடங்கள் ஏற்பட்டு விட்டதாகவும், அந்த நிலப் பரிவர்த்தனை சரியாக நடைபெற வில்லை என்றும் குற்றச் சாட்டுகள் வந்து இருக்கின்றன. அவற்றைப் பரிசீலித்து, தற்போது இந்த விசாரணை அரசாங்க குற்றத் துணை உதவி வழக்கறிஞர் அவர்களின் கருத்திறிய அனுப்பப்பட்டுள்ளது. அவர் முடிவு சொல்லிய பிறகு, அரசு நடவடிக்கை எடுக்க முடி செய்துள்ளது.

## விடுதிகளுக்கு வெளியே தங்கியுள்ள பின்தங்கிய வகுப்பு மாணவர்கள்

* 573 வின.—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரி ஹாஸ்டலில் இடமின்மையால் வெளியில் அதிக வாடகை கொடுத்துத் தங்கிப் படிக்கும் பின்தங்கிய வகுப்பு மாணவர் களுக்கு ஹாஸ்டலில் தங்கி படிக்கிறவர்களுக்கு வழங்கப்படுவது போல் ஸ்காலர்ஷிப் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இல்லை.

## *Gift of elephant tusk to Sri Sundara Mahalingam Temple*

* 574 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the State has gifted any Elephant Tusk to the Sri Sundara Mahalingam Temple in Ramanathapuram district; and

(b) if so, the details thereof?